
## திராவிடத்தால் வாழ்கிறோம்

880

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

17

# இறையாண்மை காக்கும் கழகம்!






தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

இந்திய சிறுபான்மை மக்கள் மீது, ஒன்றிய பா.ஜ.க. அரசு நிகழ்த்திய கொள்கைத் தாக்குதலாக குடியுரிமைத் திருத்தச் சட்டம் அமைந்தது. அதற்கு எதிராக, 2019–ஆம் ஆண்டு டிசம்பர் 13–ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. இளைஞர் அணி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் நகலைக் கிழித்து இளைஞர் அணி நடத்திய ஆர்ப்பாட்டம் அன்றைய தேதியில் தேசிய அளவில் செய்தியானது. குறிப்பாக, கழகத்தின் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, சட்ட நகலைக் கிழித்து வீசினார். சட்ட நகலை எரித்ததாக இளந்தலைவர் மற்றும் அவருடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 644 பேர் மீது 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இளைஞர் அணியைத் தொடர்ந்து டிசம்பர் 17–ஆம் தேதி தலைமைக் கழகமும் போராட்டத்தில் குதித்தது. போராட்டத்தில் குதித்தது மட்டுமல்ல, உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி, சிறுபான்மையினரின் பாதுகாப்பை வலியுறுத்தியது. அத்தோடும் நின்றுவிடவில்லை, மறுநாளே சென்னை அறிவாலயத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தினைக் கூட்டினார் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, தமிழக காங்கிரஸ் கமிட்டியின் அன்றைய தலைவர் கே.எஸ்.அழகிரி, வி.சி.க. தலைவர் திருமாவளவன், சி.பி.எம். கட்சியின் அன்றைய மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சி.பி.ஐ. மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்ட அன்றைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அங்கமாக இருந்த அனைத்து தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

அந்தக் கூட்டத்தில், "மோடி ஆட்சியில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கிறது. தொழில்துறை வளர்ச்சி தேங்கிவிட்டது. வேளாண்மை வறண்டு விவசாயிகள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி விண்ணைத் தொடும் அளவு உயர்ந்துகொண்டே செல்கிறது. ஏழை எளிய நடுத்தர மக்களின் வாங்கும் சக்தி குறைந்துகொண்டே போகிறது. பெண்கள், தலித்துகள், பழங்குடியினர் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்கின்றன. இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டிய ஒன்றிய அரசு, முக்கிய பிரச்சினைகளிலிருந்து, மக்களின் கவனத்தைத் திசை திருப்பவும், ஆர்.எஸ்.எஸ். வகுத்தளித்துள்ள மத ரீதியான அடிப்படைவாதக் கொள்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையிலும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது" என ஒன்றிய அரசையும், இச்சட்டம் நிறைவேறக் காரணமான அ.தி.மு.க.-வையும் கடுமையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### தேசிய தலைப்புச் செய்தி

அத்துடன், 23.12.2019 அன்று 'குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்புப் பேரணி' நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எழும்பூரில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகத்தில் தொடங்கி, ராஜரத்தினம் மைதானம் வரை பல்லாயிரக்கணக்கானோர் புடைசூழ நடைபெற்றது இந்தப் பிரமாண்ட பேரணி. தமிழ்நாட்டு ஊடகங்கள் மட்டுமின்றி இந்தி, ஆங்கில செய்தி ஊடகங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் பேரணிதான் அன்றைக்கு தலைப்புச் செய்தியாக மாறி, அகில இந்திய அளவில் கவனம் ஈர்த்தது.

டெல்லியில் ஹாஹீன் பாக் பகுதியில் நடைபெற்ற தொடர் போராட்டம் போல, சென்னை வண்ணாரப்பேட்டையில் நடைபெற்ற தொடர் போராட்டத்தின்போது அவர்களோடு துணை நின்றது கழகம். அந்தப் போராட்டத்தைக் கலைக்க அன்றைய அ.தி.மு.க அரசு தடியடி பிரயோகம் செய்தபோது, அதைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உறுதுணையாக நின்றது கழகம்தான்

குடியுரிமைத் திருத்தச் சட்டப் போராட்டம், நாடு முழுவதும் அலை அலையாய் பரவியபோது, கொரோனா பேரிடர் அமைதிப்படுத்தியது. உலகையே உலுக்கிவிட்ட அப்பேரிடரில் பொது அமைதி, சுகாதாரப் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒத்திவைத்தது இஸ்லாமிய சமூகம். அனைத்து மாநிலங்களிலும் மிகத் தீவிரமாக நடைபெற்ற போராட்டங்கள் ஓய்ந்தன. தமிழ்நாட்டிலும் போராட்டங்கள் ஓய்ந்தன. ஆனால், கழகத் தலைவரின் போர்க்குணம் மட்டும் ஓயவில்லை. 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கூட்டங்களில் எல்லாம், குடியுரிமைத் திருத்தச் சட்டம் குறித்து தவறாமல் பேசினார் கழகத் தலைவர்.

> "அது வெறும் அறிவிப்பு அல்ல, இஸ்லாமிய சமூகத்தையும், ஈழத்தமிழர்களையும் ஆரத் தழுவிய அரவணைப்பு."

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைந்ததும், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என பிரச்சாரங்களில் உறுதிபடத் தெரிவித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'அகதிகளாக வருவோரை மத ரீதியாகப் பிரித்துப் பார்க்கும் வகையில், சி.ஏ.ஏ. சட்டம் உள்ளது. மதச்சார்பின்மை கோட்பாடுகளுக்கும், மத நல்லிணக்கத்துக்கும் உகந்ததாக இந்த சட்டம் இல்லை. இந்திய நாட்டின் ஒற்றுமையை போற்றும் வகையில் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய தமிழக சட்டப் பேரவை வலியுறுத்துகிறது' என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தது இத்தீர்மானம்.

### மீண்டும் துரோகம் செய்த அ.தி.மு.க.

ஆனால் 2019–ஆம் ஆண்டில் இஸ்லாமியர்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் செய்த துரோகத்தையே மீண்டும் 2021–லும் அ.தி.மு.க. செய்தது. தீர்மானத்தை எதிர்க்கிறோம் என வெளிப்படையாகச் சொல்லி நேர்மையாக வெளிநடப்பு செய்தனர் பா.ஜ.க. உறுப்பினர்கள். "முக்கியத்துவம் வாய்ந்த சில பிரச்னைகளைப் பேச முயற்சித்தோம். சபாநாயகர் அனுமதிக்காததால் வெளிநடப்பு செய்கிறோம்" என்று சாக்குபோக்கு சொல்லி அவையில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது. இதை விட முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பிரச்னை வேறென்ன இருக்க முடியும்? பா.ஜ.க.–வை எதிர்த்து தீர்மானத்தை ஆதரிக்க துணிவில்லாமல் எடப்பாடியும் அவரது சகாக்களும் வெளிநடப்பு செய்தனர்.

2024–ஆம் ஆண்டு பிப்ரவரியில், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதாக அறிவித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால், கழகத் தலைவர் அவர்கள் 2019–இல் என்ன சொன்னாரோ, 2021–ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் என்ன வாக்குறுதி அளித்தாரோ, அதே நிலைப்பாட்டில் 2024–லும் உறுதியாக இருந்தார். தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் அமல்படுத்தப்படாது என்று தெரிவித்தார்.

அது வெறும் அறிவிப்பு அல்ல, இஸ்லாமிய சமூகத்தையும், ஈழத்தமிழர்களையும் ஆரத் தழுவிய அரவணைப்பு. திராவிட இயக்கம் தரும் அந்த அரவணைப்பின் கதகதப்பில்தான் தமிழ்நாட்டில் என்றைக்கும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது சிறுபான்மைச் சமூகம்.

...நீளும்

## ஆங்கிலம் விலங்கல்ல; விலங்கை உடைக்கும் கருவி!




'இந்தியாவில் ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் அவமானமாக உணர்வார்கள்' என ஒன்றிய அமைச்சர் அமித் ஷா கூறிய கருத்து, இந்தியா முழுவதும் விமர்சனம் செய்யப்பட்டதுடன், கேலியாகவும் பார்க்கப்பட்டது. இப்போது அவரது கருத்து, அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது. ஆங்கிலம் தொடர்பாக அமித் ஷாவின் கருத்தை விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, பா.ஜ.க. முக்கிய தலைவர்களின் வாரிசுகள் பலரும் வெளிநாடுகளில் கல்வி கற்று வரும் பட்டியலை வெளியிட்டு விமர்சனம் செய்துள்ளது.

அமைச்சர் பியூஷ் கோயல் மகன் மற்றும் மகள் ஆகியோர் ஹார்வர்டு பல்கலையிலும், அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், நிர்மலா சீதாராமன் பிள்ளைகள் பாஸ்டன் பல்கலையிலும் படித்துள்ளனர். அமைச்சர்கள், சிவராஜ் சிங் சௌகான், ஜோதிராவ் சிந்தியா, ஹர்தீப் சிங் பூரி ஆகியோரின் பிள்ளைகள் மேற்கு நாடுகளில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தில்தான் பயின்று வருகின்றனர். ராஜ்நாத் சிங், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் ஆகியோர் வெளிநாட்டில் படித்தவர்கள்தான். ஆங்கிலம் கற்பதற்கு வெட்கப்பட வேண்டும் எனக் கூறும் அமித் ஷா, அவர்கள் அமைச்சரவை சகாக்களைப் பார்த்து கூறட்டும் என்றும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

அமித் ஷா வின் கருத்தினை கிண்டல் செய்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி,

"ஆங்கிலம் என்பது அணை அல்ல; அது ஒரு பாலம், ஆங்கிலம் என்பது வெட்கக்கேடு அல்ல; அது ஒரு அதிகாரம். ஆங்கிலம் என்பது விலங்கல்ல; கைவிலங்கை உடைக்கும் கருவி" எனக் கூறியிருக்கிறார். தமிழ்நாடு அந்த கருத்தினை நூறாண்டுகளுக்கு முன்பே பற்றிக் கொண்டதுதான் அமித் ஷாக்களின் அச்சம்.

## ஃப்ளாஷ்பேக்





மருத்துவர் ஷபி.சுலைமான்

## கலைஞர்- இஸ்லாமிய பெண்களின் விடிவெள்ளி!

1996–ஆம் ஆண்டில், தி.மு.கழகத்தின் முதல் இஸ்லாமியப் பெண் நகர்மன்றத் தலைவர் என் தாயார் மு.சுரைரா சுலைமான். அந்த வாய்ப்பு, என் தாயாருக்கும், எங்கள் குடும்பத்துக்கும், முக்கியமாக இஸ்லாமியப் பெண்களின் அரசியல் பணிகளுக்கும் கழகம் கொடுத்த அருட்கொடை. ஆம்பூர் நகர்மன்றத் தலைவராக என் தாயார் பொறுப்பு வகித்தபோது, வேலூர் மாவட்டத்துக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்களை, வடபுதுப்பட்டு சர்க்கரை ஆலை விருந்தினர் இல்லத்தில் சந்தித்து வரவேற்பு அளித்தார். இஸ்லாமியப் பெண்களின் விடிவெள்ளி தலைவர் கலைஞர் என்றால், மிகையில்லை!

– மருத்துவர் ஷபி.சுலைமான்,
மாநில துணைச் செயலாளர், சுற்றுச்சூழல் அணி, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சியில் என்.வி.என்.!

1942–ஆம் ஆண்டு சென்னையில் அறிஞர் அண்ணா தலைமையில், 'நீதிக்கட்சி மாநாடு' சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டில் சென்னை மாவட்ட நீதிக்கட்சித் தலைவராக டி.சண்முகம் அவர்களும் செயலாளராக, என்.வி.நடராசன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131